**கவனிக்க.-** 2008.04.25 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1548 - 2008 මැයි 02 වැනි සිකුරාදා - 2008.05.02

*1548 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 430 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 431 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்**. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஏப்பிறல் 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் டிசைன் டுஓ (பிறைவேட்) லிமிட்டெட் 2007 மாச்சு 5 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

கம்பனிப் பெயர் : டிசைன் டுஓ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பிவீ 63296
பதிவு அலுவலகம் : இல. 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10

சபையின் கட்டளைப்படி,
பணிப்பாளர்.
டிசைன் டுஓ (பிறைவேட்) லிமிட்டெட்.

கோர்ப்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

5-01

## கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், 2008, மாச்சு 25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் அறியத் தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : அக்ரோ ஹறப்பான் லெஸ்தாரி (பிறைவேற்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம்: பிவீ 63565
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : 61, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1.

கார்சன் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

5-08

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஹெய்யன்துடுவ, மாபிம, இல. 187 எனுமிடத்தில் வசிக்கும் கலுசாயக்காரகே ரஞ்சித் ஆனந்தசிறி தே. அ. அ. 621740059V கொண்ட நான், மேற்படி குடியரசின் ஹெய்யந்துடுவ,மாபிம, இல. 187 என்னுமிடத்தில் வசிக்கும் விக்கிரமசிங்க பேலிகே நீலா சான்தனி விக்கிரமசிங்க தே. அ. அ. இல. 675693200V என்பவருக்கு கம்பஹா பகிரங்க நொத்தாரிசு திரு. எடிப்புளி ஆரச்சிகே தொன் ஆனந்த வீரசேக்கர என்பவரால் 2006, பெப்புருவரி முதலாம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 235 எனும் அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த சகல அதிகாரங்களும் இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கை குடியரசுக்கும் சகல இலங்கை மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

கலுசாயக்காரகே ரஞ்சித் ஆனந்தசிறி.

5-15

## பொது அறிவித்தல்

தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (அதிகாரச் சட்டம்) 11(5) ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் இக்கோ ஃபைபர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் என்(பீவீஎஸ்) 630) அதிகாரச் சட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008, மாச்சு 19 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கிறோம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இக்கோ ஃபைபர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்,
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2008, ஏப்பிறல் 04.

5-16

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கமைய பின்வரும் கம்பனி இன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

கம்பனியின் பெயர் : திதொற தியேட்டர் இன்ஸ்டிடியுட் போர் டிஸ்எபிலிட்டி ஓரியன்டட் ரிசேர்ச் அன்ட் அட்வொகேஸி
கம்பனியின் இல.: ஜீஏ 2081
கூட்டிணைப்புத் திகதி : 2008.03.04
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 1136/B5, பன்னிபிடிய வீதி, தலவதுகொட.

செயலாளர்கள்.

5-21

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ரே புரொபர்ட்டி சொலுயுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டது.

கம்பனிப் பெயர் : ரே புரொபர்ட்டி சொலுயுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனி இல. : பிவீ 63491

கம்பனி முகவரி : 7/பி, ரூபசிங்க மாவத்தை, நுகேகொடை

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008.03.19

(திருமதி) தருஷா கலேயா,
பணிப்பாளர்கள்.

5-32

### கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி 2008, ஏப்பிறல் 03 ஆந் திகதி தொடக்கம் –

கம்பனியின் முன்னைய பெயர் : பிஸ்னஸ் டெக்னோலொஜி அலையன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : N(PVS) 33690
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட
அலுவலகத்தின் முகவரி : 385சீ, 2 ஆம் மாடி, கொட்டா வீதி, ராஜகிரிய
கம்பனியின் புதிய பெயர் : அசெட் சொவ்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பி. ஆர். செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

5-43

## ஏல விற்பனைகள்

### மக்கள் வங்கி - இரத்தினபுரி நகரக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்திய 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம் கொண்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை பல்லேபத்து வெலிவிட கிராமத்தில் அமைந்துள்ள கொடபரகஹவத்தை என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. பிரசாத் விமலசேன அவர்களால் 1994.12.24 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 1603 கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 01 ஆகக் குறிப்பிட்ட 20 பேர்ச் (விசாலமான காணியும் அதனுள்ளே அமைந்த சகலதுடன் இல. 5 ஆகக் குறிப்பீடு செய்துள்ள காணி மருங்கில் 12 அடி அகலமான பாதையின் பாதை உரிமையுடன் ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 20பே.)**

மக்கள் வங்கியினால் என் மீது சாட்டப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் 2008, வைகாசி மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 2003.05.23 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" பத்திரிகைகளில் 2003.05.08 ஆந் திகதி பிரசுரித்துள்ள ஏலவிற்பனைத் தீர்மான அறிவித்தலுக்கு அவதானத் தைச் செலுத்தவும்.

**ஆதனத்திற்குட் பிரவேசித்தல்.**- கடுவெல நகரத்திலிருந்து மாலபே பாதையில் 3.2 கி. மீ. அளவு சென்றதும் சந்திக்கும் பிரதான பாதையால் வலதுக்கு இருக்கும் வெளிவிடப் பாதைக்குத் திரும்பி அந்தப் பாதையில் 1/4 கி. மீ. அளவு பிரயாணம் செய்ததும் பாதையில் வலது பக்கத்தில் பாதைக்கு எல்லையாக 1 ஆம் இலக்கமாகிய இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலத்தின் இறுதியில் வெற்றியான கொள்வனவாளரால் கீழ்க்காணும் விதமாக பணத்தால் செலுத்துதல் வேண்டும் :

(1) கொள்விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி அதிகார சபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% ;
(3) ஏலத்தின் தரகு ஆக விற்பனை விலையின் 2 1/2% ;
(4) எழுதுவினைஞரினதும் அறிவிப்பாளரினதும் கட்டணமாக ரூ. 500 ;
(5) விற்பனைச் செலவின் ஏனைய கட்டணமிருப்பின் அப்பணம் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்குரிய முத்திரைக் கட்டணம்.

கொள்விலையின் மிகுதி 90% ஆன பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் "இரத்தினபுரி, புதிய நகர், இல. 54, மக்கள் வங்கி-பிரதேச தலைமை அலுவலகம், பிரதேச முகாமையாளர்" இற்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 045-2223084, 045-2230818.

உரிமை உறுதியையும் ஏனைய உரிய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட பிரகாரம் குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போதைக்கு செலுத்தியிருக்கும் கொள்விலையின் 10% பணம் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஏ. எஸ். லியனகே
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
அதிகாரம்பெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர், சத்தியம்செய்த
மொழிபெயர்ப்பாளர்.

இல. 228/ஏ, வலவ்வத்தை,
கெஸ்பாவ,
பிலியந்தலை,
தொலைபேசி இல. : 2703478, 0777459623.

5-20

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2008**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 02.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.04.2008 |
| | | வெள்ளி | 09.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2008 |
| | | வெள்ளி | 16.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2008 |
| | | வெள்ளி | 23.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2008 |
| | | வெள்ளி | 30.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2008 |
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2008 |
| | | வெள்ளி | 13.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2008 |
| | | வெள்ளி | 20.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2008 |
| | | வெள்ளி | 27.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2008 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2008 |
| | | வெள்ளி | 11.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2008 |
| | | வெள்ளி | 18.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2008 |
| | | வெள்ளி | 25.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.